මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No | ඔබේ අංකය / உமது இல / Your No | දිනය / திகதி / Date |
| DMS/General/CM/2021-01 | | 2023.01.19 |

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை **: 01/2023**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள், அரச வங்கிகள் மற்றும்
முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் யாவருக்கும்,

**<u>அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் அரசுக்கு சொந்தமான வங்கிகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் அலுவலர்களுக்கு அரசகரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல்</u>**

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள், அரசுக்கு சொந்தமான வங்கிகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் அலுவலர்களுக்கு அரசகரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2014.09.25 ஆம் திகதிய 04/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளுக்குப் பதிலாக இதற்குப் பின்னர் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு 2023.01.02 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. பூர்த்தி செய்துகொள்ள வேண்டிய மொழித் தேர்ச்சி மட்டத்திற்கு அமைவாக பதவிகளை வகைப்படுத்தல் மற்றும் உரிய கற்கைநெறி

2.1 ஒவ்வொரு பதவிகளுக்கும் ஒப்படைக்கப்படுகின்ற பணிகளுக்கு அமைவாக அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்புடைய தொகுதியை வகைப்படுத்தல் மற்றும் அந்தந்த தொகுதிக்கு உரியதாக பூர்த்தி செய்யவேண்டிய கற்கைநெறிகளின் கால எல்லை பின்வருமாறு

| 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு அமைவாக சேவை மட்டம் | ஏற்புடையதான அரச கரும மொழித் தேர்ச்சி மட்டம் | கற்கைநெறியின் காலம் |
|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1 | 200 மணித்தியாலங்கள் |
| மூன்றாம் நிலை/இரண்டாம் நிலை | 2 | 150 மணித்தியாலங்கள் |
| ஆரம்ப நிலை | 3 | 100 மணித்தியாலங்கள் |

2.2 மேற்குறிப்பிட்ட சகல கற்கைநெறிகளுக்கும் எழுத்துமூலம் மற்றும் வாய்மொழிமூலம் ஆகிய இரண்டு பகுதிகளும் உள்ளடங்க வேண்டிய அதேவேளையில், கற்கைநெறிக் காலப் பகுதியில் தொடர்ச்சியான மதிப்பீட்டு முறைமையொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

2.3 ஓர் அலுவலர் தனது மொழித் தேர்ச்சி தேவைப்பாட்டை பூர்த்திசெய்வதற்காக தனக்கு உரிய மொழிக் கற்கைநெறிக்காக குறைந்தபட்சம் 80% சதவீதம் அல்லது அதற்கு கூடுதலாக பங்குபற்றுதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. மொழித் தேர்ச்சித் தேவைப்பாட்டை பூர்த்தி செய்தல்

3.1 2013.07.01 ஆம் திகதியிலிருந்து இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதி வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இது வரையில் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத சகல அலுவலர்களும் தான் சேவையில் இணைந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின்படி அடைந்துகொள்ளுதல் வேண்டும்.

3.2 இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து சேவையில் இணைகின்ற சகல அலுவலர்களும் நியமன திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் தனக்கு உரிய ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டிய அதேவேளையில் உரிய காலத்தில் முடிவில் மொழித் தேர்ச்சியை பூர்த்திசெய்யாத அலுவலர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள ஏற்றத்தை உரிய தகைமைகளை பூர்த்திசெய்யும் வரை நிறுத்தி வைக்கப்படும். ஓர் அலுவலர் சேவைக்கு இணைவதற்கு முன்னர் பூர்த்தி செய்துள்ள எந்தவொரு மொழிக் கற்கைநெறியும் மேற்சொன்ன சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியில்

குறிப்பிடப்பட்டுள்ள மொழிக் கற்கைநெறிகளை பூர்த்திசெய்யும் தேவைப்பாட்டுக்கு ஏற்புடையதாகக் கொள்ளப்படமாட்டாது.

3.3 இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து ஆங்கில மொழிமூலம் சேவையில் இணைந்துள்ள அலுவலர்களினால் தாய்மொழி மற்றும் ஏனைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்

(அ) ஆங்கில மொழிமூலம் சேவையில் இணைந்துள்ள அலுவலரினால் தான் சேவையில் இணைவதற்கு முன்னர் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியம் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது நியமன திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களைத் தாண்டுவதற்கு முன்னர் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் இலக்கியம் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது சேவையில் இணைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக தனது தாய்மொழியாகிய சிங்களம் அல்லது தமிழ் மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்காக இந்தப் பணிக்காக மாத்திரம் விசேடமாக அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்படுகின்ற சிங்களம் / தமிழ் தாய்மொழி பற்றிய சான்றிதல் மட்டத்திலான கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அடிப்படையில் அந்த அலுவலர்கள் தாய்மொழித் தேர்ச்சியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக கருதுதல் வேண்டும்.

(ஆ) மேலும், மேற்குறிப்பிடப்பட்ட அலுவலரினால் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை பூர்த்திசெய்வது சம்பந்தமாக இந்த சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் உள்ளடங்கியுள்ள சகல ஏற்பாடுகளையும் ஏற்புடையதாக கொள்ளுதல் வேண்டும்.

(இ) அதேபோன்று, ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைந்துள்ள அலுவலர்களுக்கு, இரண்டு அரசகரும மொழிகளிலும் தேர்ச்சியை பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தாய்மொழி அல்லாத ஏனைய அரச கரும மொழிக்காக மாத்திரம் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும்.

3.4 இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியளவில் 04/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏனைய அரச கரும மொழி தேர்ச்சியை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மீண்டும் ஏனைய அரச கரும மொழித்

தேர்ச்சியை பூர்த்திசெய்ய வேண்டிய அவசியம் கிடையாது. அவர்கள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்திசெய்துள்ள அலுவலர்களாக கருதப்படுவர்.

3.5 ஒரு தடவை ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை பெற்றுள்ள அலுவலர்களுக்கு ஒரே சேவை நிலையத்தில் தரம் ரீதியான பதவி உயர்வின் போது ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லாத அதேவேளையில், ஒரே சேவை நிலையத்திலும் கூட உயர் சேவை மட்ட பதவியொன்றுக்கு நியமனம் பெறும் போது அந்த சேவை மட்டத்திற்கு உரிய அரசகரும மொழி தேர்ச்சியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.6 2013.07.01 ஆம் திகதியிலிருந்து இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதி வரை ஆங்கில மொழிமூலம் சேவையில் இணைந்துள்ள, இது வரையில் தாய்மொழித் தேர்ச்சி மற்றும் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சி என்பவற்றை பூர்த்திசெய்யாத அலுவலர்கள், இந்த சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் அந்த தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்காக மேலே 3.3 பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 ஓர் அலுவலர் தனக்கு உரிய மொழிக் கற்கைநெறிக்காக விண்ணப்பித்து, அதில் பங்குபற்றுவதற்கு கோரிக்கைவிடுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தருக்கு தேவையான லீவுகளை தொடர்புடைய நிறுவனத்தின் தலைவரினால் வழங்குதல் வேண்டும். லீவுகளை அனுமதிக்கும் போது ஒவ்வொரு அலுவலரினதும் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்திசெய்ய வேண்டிய திகதிகளின் முன்னுரிமை ஒழுங்கினைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

04. அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் பொறுப்புக்கள்

4.1 பதவிகளுக்கு ஏற்புடையதான விதத்தில் தயாரிக்கப்படுகின்ற மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் கற்கைநெறியை நடாத்தும் பொறுப்பு அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் தேசிய மொழி கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படுகின்ற அதேவேளையில், கற்கைநெறியின் பாடவிதானத்தை தயாரிக்கும் பொறுப்பு அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு உரியதாகும்.

4.2 நிறுவனங்களில் கடமை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக பொது மக்களுக்கான சேவைகள் வழங்குவதனை இலகுபடுத்துவதற்காக அந்தந்த சேவை மட்டங்களுக்கு

உரிய சிங்களம் / தமிழ் பேச்சு கற்கைநெறியை அறிமுகப்படுத்துதல் மற்றும் அது சம்பந்தமான பூரண வழிகாட்டல்கள் அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.3 இருமொழி அல்லது மும்மொழித் தேர்ச்சியைக் கொண்டுள்ள அலுவலர்களுக்கு தமது மொழி ஆற்றல்களை பயன்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையானவை உபாய திட்டங்களையும் சூழலையும் அறிமுகப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பன அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

05. ஏனைய அரசகரும மொழி பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக தேசிய மொழித் தகைமை (National Language Qualification - NLQ) வருடாந்த மதிப்பீட்டுப் பரீட்சை

5.1 அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் அரச அலுவலர்களின் மொழித் தேர்ச்சி ஆற்றல்களின் முறையான பயன்பாட்டின் பொருட்டு தேசிய மொழித் தகைமை (National Language Qualification - NLQ) மதிப்பீட்டு பரீட்சை வருடாந்தம் நடாத்தப்படும்.

5.1.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற கல்வித் தலைமை அல்லது பதவி ஆகியவற்றை கவனத்தில் கொள்ளாது இந்த தேசிய மொழித் தகைமை பரீட்சையில் சித்தியடைகின்ற அலுவலர்களுக்கு அவர்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற புள்ளி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விதமாக ஒரு தடவை மாத்திரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல் வேண்டும்.

| | |
|---|---|
| 80 - 100 புள்ளிகள் வரை | - ரூபா. 25,000/- |
| 65 - 79 புள்ளிகள் வரை | - ரூபா. 20,000/- |
| 50 - 64 புள்ளிகள் வரை | - ரூபா. 15,000/- |

- இதற்கு மேலதிகமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் (ETF) தாக்கம் செலுத்தாத மேலதிக சம்பள ஏற்றம் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

- இவ்வாறு வழங்கப்படுகின்ற மேலதிக சம்பள ஏற்றத்தை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டு

பரீட்சைக்கு ஐந்து (05) வருடங்களுக்கு ஒருமுறை தோற்றி 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும்.

- ஓர் அலுவலருக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் முன்னைய சந்தர்ப்பத்தில் பெற்ற புள்ளி மட்டத்திலும் பார்க்கக் கூடுதலான புள்ளி மட்டத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆரம்பத்தில் பெற்ற கொடுப்பனவுக்கும் கூடுதலான புள்ளி மட்டத்திற்கும் உரிய கொடுப்பனவுக்கும் இடையிலான வேறுபாட்டை செலுத்த வேண்டிய அதேவேளையில், ஓர் அலுவலர் தமது சேவை காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய அதிகபட்ச கொடுப்பனவு ரூபா 25,000/- ஆகும்.

- ஓர் அலுவலர் முன்னைய சந்தர்ப்பத்தில் பெற்ற புள்ளி மட்டத்திலும் பார்க்க குறைந்த புள்ளி மட்டம் ஒன்றினை பெற்றுக்கொள்வதன் காரணமாக ஆரம்பத்தில் பெற்ற கொடுப்பனவு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் அறவிடப்படமாட்டாது.

06. ஒழுங்குபடுத்தல் குழு மற்றும் அதன் பொறுப்புக்கள்

6.1 இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய பிரச்சனைகளை, தொடர்புடைய அமைச்சின் செயலாளரினால் தனது பரிந்துரைகளுடன் பின்வரும் குழுவின் அழைப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய அதேவேளையில் அந்தப் பிரச்சினைகள் சம்பந்தமான இறுதித் தீர்மானம் குழுவினால் எடுக்கப்படும்

- முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் - தலைவர்
- அரசாங்க தொழில்முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் / தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் - உறுப்பினர்
- அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம் - உறுப்பினர்
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட சிரேஷ்ட அலுவலர் ஒருவா் - அழைப்பாளர்

6.2 2023.01.19 ஆம் திகதிக்கு முன்னர் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சிங்களம் / தமிழ் கற்கைநெறியைப் (ஆரம்ப, உயர், பேச்சு) பயின்று தொடர்புடைய எழுத்து மற்றும் வாய்மொழிமூலப் பரீட்சையில் சித்தியடைந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட

நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிங்கள / தமிழ் சான்றிதழ் கற்கைநெறியொன்றை / உயர் கற்கைநெறியொன்றைப் பயின்று அதில் சித்தியடைந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப் படிப்புக்காக ஏனைய மொழியாக சிங்களம் / தமிழ் மொழியைப் பயின்றுள்ள அலுவலர்களுக்கு, தமது சான்றிதழை அமைச்சின் செயலாளரின் மூலம் மேற்குறிப்பிட்ட குழுவுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் இந்த சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மொழித் தேர்ச்சி தேவைப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்பதனை வினவ முடியும்.

6.3 மொழித் தேர்ச்சிக்கு ஏற்புடையதான இந்தப் புதிய ஏற்பாடுகளுக்குப் புறம்பாக ஏதேனும் ஒரு மொழித் தேர்ச்சி ஏதேனும் ஒரு பதவிக்குத் தேவை என்பதாக நியமன அதிகாரிகள் பரிந்துரைப்பார்களாயின், அக் கோரிக்கைகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள குழுவுக்கு சமர்ப்பித்து தீர்மானம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

07. மொழித் தேர்ச்சியை பூர்த்திசெய்து கொள்வதற்கு அலுவலர்களுக்கு வசதிகளை வழங்குதல்

மேற்குறிப்பிடப்பட்ட விதமாக உரிய மொழித் தேர்ச்சியை தரப்பட்டுள்ள கால எல்லைக்குள் பூர்த்தி செய்த, ஆனால் தொடர்ந்தும் தமது மொழித் தேர்ச்சியை வளர்த்துக் கொள்வதற்கு விரும்புகின்ற அலுவலர்களுக்கு அரசகரும மொழிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் வழிகாட்டலின் அடிப்படையில் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்படுகின்ற பாடவிதானத்திற்கு அமைவாக தொடர்புடைய மொழித் தேர்ச்சி பற்றிய அறிவை 05 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்துக்கொள்ளும் ஒரு கற்கைநெறிக்கு பங்குபற்றச் செய்வதற்கு நிறுவனத்தின் தலைவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த கற்கைநெறியை பயில்கின்ற அலுவலர்களுக்கு ஒரு வாரத்தில் ஒருநாளுக்கு மேற்படாத கடமை லீவினை வழங்குவதற்கு நிறுவனத்தின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

08. இதுவரை மொழித் தேர்ச்சியை அடைந்துகொள்ளுதல் குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் சம்பந்தமான ஏற்பாடுகள்

8.1 தற்போது 04/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக எழுத்துமூல தேவையை மாத்திரம் பூர்த்திசெய்துள்ள சகல அலுவலர்களுக்கும் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், வாய்மொழிமூல மொழித் தேர்ச்சியை அடைந்துகொள்வதற்காக எதிர்காலத்தில் ஒரு சந்தர்ப்பம் மாத்திரம் வழங்கப்படும். அதற்கு அமைவாக அரசகரும மொழிகள்

திணைக்களத்தின் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி வாய்மொழிமூலப் பரிட்சை ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்படும். அந்த வாய்மொழிமூலப் பரீட்சையில் சித்தியடைகின்ற அலுவலர்களும் தமக்கு உரித்தான அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்திசெய்த அலுவலர்களாகக் கருதப்படுவர்.

8.2 தற்போது ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியின் பொருட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படுகின்ற 2014.09.25 ஆம் திகதிய 04/2014 ஆம் இலக்கத்தை கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கொடுப்பனவுகளை பெறுகின்ற அலுவலர்களுக்கு பாரபட்சம் ஏற்படாத விதத்தில் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து இரத்து செய்யப்படுகிறது.

09. சகல ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அரச கரும மொழி சம்பந்தமான ஏற்பாடுகள் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திருத்தப்பட்டுள்ளதாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ கே.எம்.எம். சிறிவர்தன
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளர்

பிரதி :-
1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. செயலாளர், பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு
5. கணக்காய்வாளர் தலைமை அதிபதி